541—

மண்ணச்சநல்லூரில் அரசு தங்கும் விடுதி கட்டுதல்.

* 5393—திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூரில் அரசு தங்கும் விடுதி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதற்கான கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

1—

அ. உடுக்குறியிடாத வினாக்கள்.

(பத்தாம் பட்டியல்)

திருப்புறம்பியம் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு புதிய கட்டிட வசதி.

வினா எண். 2614—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கும்பகோணம் தாலுக்கா, திருப்புறம்பியம் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் போதிய கட்டிட வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டிடங்கள் கட்ட தமிழ்நாடு பாடநூல் நிறுவனத் திட்டத்தின் மூலம் நிதி வழங்க முன்வருமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் பள்ளிக் கட்டிடங்களுக்கென நிதி உதவி அளிக்க இயலாத நிலையில் தற்போது உள்ளது. எனினும், ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கை/இரண்டாம் பகுதித் திட்டத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. நிதிநிலைமைக்கு ஏற்ப, பள்ளிகளின் தேவைக்கான முன்னுரிமையின் அடிப்படையில் கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

---

* 10-4-1992 ஆம் தேதிக்கான பட்டியலில் இருந்து தள்ளிப்போடப்பட்டது.